செய்தி வெளியீடு எண்:480 நாள்:13.10.2016

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (13.10.2016) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில், பொது விநியோகத்திட்ட செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டத்திற்கு, 3 மாததேவைக்கான அரிசி கையிருப்பில் உள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர், எதிர்வரும் தீபாவளி பண்டிகை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில், தேவைப்படும் பச்சரிசி, சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள், பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை நியாயவிலை அங்காடிகளுக்கு உடனுக்குடன் நகர்வு செய்யவேண்டுமென அலுவலர்களை கேட்டுக்கொண்டார். அத்தியாவசிய பொருள்கள் விநியோகம் குறித்த குறைபாடுகள் இருந்தால், குடும்ப அட்டைதாரர்கள் குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்படும் 28592828 என்ற எண்ணுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் செயல்படும் 9445190660, 9445190661, 9445190662 ஆகிய எண்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

நியாயவிலை அங்காடிகளில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் பணிக்கு ஆதார் அட்டைகள் விவரம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இப்பணியினை விரைவில் முடித்து, புதிய மின்னணு அட்டைகள் வழங்க தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், அத்தியாவசியப் பொருள்கள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, இதுவரை 912 நபர்கள் தடுப்பு காவல் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உணவுத்துறை முதன்மைச் செயலாளர்(பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர்/முதன்மைச் செயலாளர் Dr.கே.கோபால்,இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் முனைவர் கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.S.மதுமதி,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.A.ஞானசேகரன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**